www.tamilarangam.net

from Sirithunga / Wesley

# மாக்சிஸ தொழிலாளர் போக்கின் உட்கட்சி அறிக்கை

7-11-89

## குறிக்கோள்

சிறுமுதலாளி வர்க்கத்தின் வெறித்தனமான கிளர்ச்சி காரணமாகவும், தேசிய இனப்பிரச்சினை ஊடாக வடக்கு-கிழக்கில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாகவும், தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பிரேமதாச அரசாங்கம் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியது. ஆனால் அது ஸ்ரீ.லங்கா.[illegible]. கட்சியினதும், இடதுசாரிக் கட்சிகள் உட்பட்ட எதிரணியினதும், வங்குரோத்து அரசியல் காரணமாக ஓரளவு தப்பித்துக் கொண்டது.

பொருளாதார நெருக்கடியின் முன்னே அங்குமிங்கும் அசைவதற்குக் கூட சக்தியற்றிருந்த அரசாங்கம், வட்ட மேசை மாநாடு என்னும் காட்சிப் பொருள்களின் ஊடாக 375 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகப் பெற்றது. இக்கடன் தொகைகூட மோசமான நிபந்தனைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளது என்பதனை அரசாங்கம் மூடி மறைக்க முயலுகின்றது. ரூபாயின் பெறுமதியை மேலும் மதிப்பிறக்கம் செய்வது அவற்றுள் மிக முக்கிய நிபந்தனையாகும். தற்போது டொலரின் பெறுமதி 40ரூபாயை விட அதிகமாகும். சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி என்பன தொழிலாள வர்க்கத்தையும் மத்தியதர வர்க்கத்தையும் பாதிக்கக்கூடிய வகையில், யூ.என்.பி.அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள உத்தேசத் திட்டங்கள் பின்வருமாறு;

(1) அரசாங்க சேவையில் வெட்டு, (2) இ.போ.ச.வுக்கும் புகையிரதத் திணைக்களத்திற்கும் வழங்கப்படும் நிவாரணங்களை வெட்டுதல், (3) முக்கிய நான்கு நெசவுக் கைத்தொழில்கள் உட்பட இலாபம் ஈட்டக் கூடிய 16 அரச கூட்டுத்தாபனங்களைத் தனியாரிடம் கையளித்தல், (4) தொலைத்தொடர்பு, இ.போ.ச., வங்கலப் பொருட்கள், அரச வடிசாலை, காஸ் நிறுவனம் என்பவற்றைத் தனியாரிடம் ஒப்படைத்தல் அரசு சுவீகரித்த யூனைட்டட் மோட்டர்ஸ் ஏற்கனவே தனியாரிடம் கையளிக்கப் பட்டுள்ளது. (5) ஓய்வில் அனுப்பும் வயதெல்லை திருத்தப்பட்டுள்ளது. (6) பாதுகாப்புத்துறை, சுகாதாரத்துறை தவிர்ந்த ஏனைய துறைகளுக்கு அவசியமான பண்டங்களை இறக்குமதி செய்வதில் உள்ள நிபந்தனைகளை அகற்றுதல், (7) வெளிநாட்டினர் இலங்கையில் நிறுவனங்களை வாங்குவதில் விதிக்கப்பட்டுள்ள 100% வரிகளை இல்லாதொழித்தல் (ஏற்கனவே அமுலாக்கப்படுகின்றது.) (8) மதுவரி-புகையிலை வரி என்பவற்றை மேலும் உயர்த்துதல்.

மேற்படி நிபந்தனைகளை அமுலாக்குவதற்கு உதவி வழங்கும் நாடுகள், விழிப்பாக இருப்பதுடன் சர்வதேச நிதிநிறுவனம், உலக வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் வரவு செலவு அறிக்கையைத் தயார் செய்வதைப் பரிசீலனை செய்வதற்கு இங்கு வருகை தந்துள்ளனர். அத்தியாவசிய உணவுப் பொருட்கள், [illegible] காரணமாக அமைந்தது, வர்க்கப் போராட்டப் பாதையில்

6.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எரிபொருள், உரம், சீமெந்து என்பவற்றின் விலைகள் திடீரென உயர்த்தப்பட்டுள்ளன. அண்மையில், தல்உறிரிய நெசவாலை திடீரென கொரிய நிறுவனமொன்றிற்கு 260 மில்லியன் ரூபாய்க்கு விற்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட உத்தேசத் திட்டங்களை அமுலாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இவற்றின் மூலம், ஒடுக்கப்பட்ட மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளாக்கப்படுவார்கள். மக்களைக் கொன்று குவிக்கும் திட்டங்களைக் கொண்டதாகவே பிரேமதாசவின் எதிர்கால நடவடிக்கைகள் அமையும். போலி ஜனசவிய உறுதிமொழிகள் பெரும் ஏமாற்றுத் திட்டங்களாகவே அமையப் போகின்றது.

விரும்பத்தகாத சூழ்நிலையிலும்கூட, இந்திய ஆளும் வர்க்கத்தைச் சார்ந்த முதலாளித்துவத்துடன் சீர் உடன்பாட்டிற்கு வர பிரேமதாச இறுதியாக நிர்ப்பந்திக்கப்பட்டார். இந் நடவடிக்கைகளின்போது இந்திய அரசாங்கத்திற்கு எதிராக விடுதலைப் புலிகளை ஈடுபடுத்துவதில் அரசாங்கம் வெற்றி கண்டபோதிலும், அதற்கு அப்பால், விடுதலைப் புலிகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதில் தோல்வி அடைந்தது. பிரேமதாச-ரஞ்சன் அரசாங்கம் தமது சகபாடியான புலிகள் இயக்கத்தின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் வடக்கு-கிழக்கு மாகாண சபையை உறுதிப்படுத்துவதற்குத் தீர்மானித்ததன் மூலம், இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொண்ட புதிய உடன்படிக்கை எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதனைப் புரிந்துகொள்ள முடியும். அதே சமயம் சிங்கள சிறுமுதலாளித்துவத்தின் ஊடாக வரும் எதிர்ப்பிற்கு பிரேமதாச முகங்கொடுப்பதும் இலகுவான காரியமன்று. எனவே, ஈ.பி.ஆர்.எல்.எவ்.விற்கு எதிராக விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஏவிவிடும் விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், அது சிங்கள இனவாதிகளின் தேவையையும் தற்காலிகமாகத் திருப்திப்படுத்துகின்றது. தமிழ் தேசிய இராணுவத்திற்கு (ரீ.என்.ஏ.) எதிராக ரஞ்சன் விஜேரத்ன ஆரம்பித்துள்ள பிரச்சாரம் இனவாதத்தைத் தூண்டுவதற்கு எடுக்கப்படும் முயற்சியாகும். அது மாத்திரமல்ல, அதன் மூலம் வடக்கிலும் தெற்கிலும் செயற்படும் அதிதீவிரவாதிகளுடன் இணைந்து ஈ.பி.ஆர்.எல்.எவ்.வைத் தாக்குவது அதன் குறிக்கோளாகும். முதலாளித்துவத்தின் தேவை கருதி, தமிழ் - சிங்கள சக்திகளை ஒன்றுடன் மற்றொன்றை மோத வைக்கும் முயற்சியில் ஈடுபடும் அதே சமயம் ஸ்ரீ.ல.சு.க. உட்பட்ட இனவாதச் சக்திகள் மீள ஒன்றிணைவதற்கு இது சாதகமாக அமையும்.

ஜே.வி.பி.தலைமையில் உருவாக்கப்பட்ட கிளர்ச்சி சிங்கள இனவாதத்தையும், இந்திய எதிர்ப்பையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால், அரசாங்க எதிர்ப்பை உறுதியுடன் பிரதிநிதித்துவப்படுத்தியமை காரணமாகவே, அது பரவலாக விரிவடைந்தது. இடதுசாரி இயக்கத்தின் தோல்வியும் மற்றுமொரு காரணியாக அமைந்தது. வர்க்கப் போராட்டப் பாதையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நம்பிக்கை இழந்த காரணத்தால், பழைய 'புதிய' இடதுசாரித் தலைமை முதல் கட்டத்தில் முதலாளித்துவ உடன்படிக்கைகளின் பாதுகாவலனாகவே செயற்பட்டது. மக்களுக்குத் தலைமை தாங்குவதற்குப் பதிலாக பிரேமதாசாவையும் ஜே.வி.பி.தலைமையையும் பின்பற்றும் நிலைக்கு இடதுசாரிக் கட்சிகளும், நவசமசமாஜக் கட்சியும் தள்ளப்பட்டன. குறிப்பாக ந.ச.ச.கட்சி தனது கைகளாலேயே தனது கழுத்தில் தூக்குக் கயிற்றை மாட்டிக் கொண்டது.

தாங்க முடியாத வாழ்க்கைச் செலவுச் சுமை, உக்கிரமான பிரச்சினைகள் என்பவை முன்னே இடதுசாரிக் கட்சிகள் பேசாமடந்தைகளாக இருந்தன. தூக்கின் வலிமையுடன், பயங்கரவாத நடைமுறைகள் ஊடாகத் தொழிலாள வர்க்கம் நெறிபிறழ்வான வேலைநிறுத்தங்களுக்கும் சேவைகளைச் செயல் இழக்கச் செய்த அரச இயந்திரத்தின் இயக்கத்தை முழுமையாக நிறுத்துவதற்கும் சிறுமுதலாளித்துவக் கிளர்ச்சிக்காரர்களால் தூண்டப்பட்டனர். தொழிலாள வர்க்கம் குறிப்பாகத் தமது குறைந்தபட்ச சம்பளக் கோரிக்கையை முன்வைத்து அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒரு கால கட்டத்திலேயே இந்நிலைமை உருவாகியது. மாக்சிஸ்டுகள் ஏற்கனவே அறிந்திருந்ததுபோல தொழிலாள வர்க்கத்தின் உண்மையான ஒத்துழைப்பு இன்றி சிறுமுதலாளித்துவத்தின் நடவடிக்கைகள் வெற்றி அளிக்கவில்லை. தனிமைப்படுத்தப்பட்ட தனிநபர் பயங்கரவாதம் முதலாளித்துவ அரச இராணுவ அடக்குமுறைக்கு முகங்கொடுக்கவில்லை. நட்டாற்றில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த பிரேமதாச அமைத்த பொறியில் அனைத்து அரசியல் கட்சிகளும் சிக்கியமையால் சிறுமுதலாளித்துவ கிளர்ச்சியை அடக்குவதில் அரச இராணுவம் வெற்றி கண்டது. அரசாங்க விரோத இடதுசாரிகள், வெகுஜனத் தொடர்பு சாதன ஊழியர்கள், அப்பாவி மக்கள், ஆயுதப்படைகளைச் சார்ந்தோரின் குடும்பங்களை அழித்தொழித்தல் என்னும் பயங்கரவாத நடவடிக்கைகள், அரச அடக்குமுறையை வெற்றிகரமாக அமுல்படுத்த ஆயுதப்படைகளை நெறிப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு சாதகமான நிலையை ஏற்படுத்தியது. ஆகவே, சிறுமுதலாளித்துவ கிளர்ச்சி ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்த சமூக-அரசியல்-பொருளாதாரப் பிரச்சினைகளுக்குக் குறிப்பிட்ட சிறு தீர்வினையேனும் இவ்வரசாங்கத்தால் முன்வைக்க முடியாமையால் இராணுவ ரீதியில் பெற்ற வெற்றி தற்காலிகமானதாகவே அமையும்.

நேர்மையான தேர்தல் மூலம் அதிகாரத்திற்கு வராத யூ.என்.பி. இந்திய இராணுவத்தை வெளியேற்றும் பிரச்சினையையும், வடக்கு-கிழக்கு நெருக்கடியையும், தென்னிலங்கையின் சிறுமுதலாளித்துவக் கிளர்ச்சியையும், பொருளாதார நெருக்கடியையும் மேன்மேலும் சிக்கலாக்கியது. இந் நிலைமைகளின் கீழ் முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் "தேசிய அரசாங்கம்" "தற்காலிக அரசாங்கம்" பற்றிய உத்தேசத் திட்டங்களை முன்வைப்பது ...

www.tamilarangam.net



மூலம் எதிர்க்கட்சியினரைத் தமது பொறியிற் சிக்க வைப்பதற்கு முயன்றனர்.
யதார்த்த ரீதியான தேசிய அரசாங்கம் என்ற கருத்திற்கும், தற்காலிக
அரசாங்கம் என்ற கருத்திற்கும் இடையில் உண்மையான வேறுபாடு கிடையாது.
சர்வகட்சி மாநாட்டிற்கு ஸ்ரீ.ல.சு.க., ல.ச.ச.க., க.க., த.வி.கூ.,
ம.ஐ.மு., முஸ்லிம் காங்கிரஸ் உட்பட்ட ஏனைய சிறுகுழுக்கள் பங்குபற்றியது
மூலம் பிரேமதாச அரசாங்கத்திற்கு அவசியமான சூழல் உருவாக்கப்பட்டது.
இங்கு சர்வகட்சி மாநாட்டில் ந.ச.ச.க. பங்கு பற்றியது ஓர் முக்கிய
நடவடிக்கையாகும். ஆனால், அவர்கள் பிரகடனப்படுத்துவதற்கு அமைய ஓர்
நிகழ்ச்சி நிரல். இல்லாமை நடைமுறைச் சிக்கலாக சுட்டிக் காட்டப்பட்டது.
அது அடிப்படைக் கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினையாக அமையவில்லை.
எவ்வாறாயினும், தற்காலிக அரசாங்கம் பற்றிய கருத்தின் உரிமையாளர்க
ளாகவும் ஆர்ப்பாட்டக்காரர்களாகவும், மாறிய காரணத்தால் அவர்கள்
மேற்கொண்ட மார்க்சிஸத்திற்கு மாறான நிலைப்பாடு அழிந்து விடப்போவதில்லை.
பல்வேறு வரைவிலக்கணங்களைக் கொடுக்க முயன்றாலும், தற்காலிக அரசாங்கம்
என்பது புதிய வடிவத்திலான கூட்டரசாங்கத்தை அமைத்து முதலாளித்துவத்தின்
உயிரைப் பாதுகாப்பதற்குப் பங்காளிகளாவதைத் தவிர வேறில்லை. இத்
தலைவர்கள் உறுதிமொழி அளித்தபடி தற்காலிக அரசாங்கம் நாட்டில்
அமைதியையோ நியாயமான தேர்தலையோ நடத்த முடியாத அதே வேளை
எந்தவொரு அடிப்படைப் பிரச்சினையையோ தீர்க்க முடியாது. அதற்குப்
பதிலாகத் தொழிலாள வர்க்கமும் ஏழை மக்களும் முதலாளித்துவ அரசு
இயந்திரத்தின் பங்காளர்களாக்கப்பட்டுச் சுற்றி வளைக்கபடுவர். ந.ச.ச.
கட்சி கூறுவது போல தற்காலிக அரசாங்கம் பற்றிய கருத்தை அமுல்படுத்தக்
கூடியதாக இருந்திருக்கும். ஆனால், ஏனைய கட்சிகள் சர்வ கட்சி மாநாட்டில்
பங்குபற்றியமையால் இப்பொறியிலிருந்து தப்ப முடிந்தது. சிறுமுதலாளித்துவ
கிளர்ச்சியை கட்டுப்படுத்துவதையிட்டு அரசாங்கம் திருப்தி கண்டால் தேசிய
அரசாங்கம், தற்காலிக அரசாங்கம் அல்லது பொதுமக்கள் அபிப்பிராய
வாக்கெடுப்பு என்னும் அவசியம் பிரேமதாச ஆட்சிக்கு இச் சந்தர்ப்பத்தில்
ஏற்பட மாட்டாது.

மத்தியதர வர்க்க சொற்போருக்கு வரையறுக்கப்பட்ட ந.ச.ச.
கட்சியும், ஏனைய தொழிலாள வர்க்கக் கட்சிகளும் சுயாதீன செயற்பாட்டிற்குத்
தொழிலாள வர்க்கத்தை வழிநடத்த முயலாமை இன்று தொழிலாள வர்க்கம்
மத்தியில் உள்ள முக்கிய பிரச்சினையாகும். நாம் தொடர்ச்சியாக சுட்டிக்
காட்டியது போல இத் தவறான வழிகாட்டல் சிறுமுதலாளி வர்க்கச் செயற்
பாட்டை விரிவாக்கவும், அடுத்த கட்டத்தில் முதலாளித்துவ அரசு இயந்திரம்
அதனை ஒடுக்கித் தொழிலாள வர்க்கத்தை நசுக்குவதற்கும், முக்கிய காரணியாக
அமைந்துள்ளது. ஜயவர்தன அரசாங்கம் 1988ன் இறுதியில் அடைந்திருந்த
வங்குரோத்துத் தன்மையைப் பயன்படுத்தித் தொழிலாள வர்க்கத்தினதும்
ஏழை மக்களினதும் கோரிக்கைகளும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும்
அடிப்படையாகக் கொண்டு வேலைநிறுத்த நடவடிக்கையை நோக்கிச் செல்வதற்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கான நிலைமைகள் உருவாகியிருந்தன. ஜயவர்தனவிற்கும் இடதுசாரிகளுக்கும் இடையே அமைந்த ஒத்துழைப்பு இதற்குத் தடையாக அமைந்தது. ஜே.வி.பி. நெறிபிறழ்வான முறையிலேனும் இவ் வெற்றிடத்தை நிரப்பியது. ஸ்தூல நிலைமைகளைப் புரிந்துகொள்ளாமல் கற்பனாவாத அவசியங்களுக்குத் தந்திரோபாயங்களை மாற்றியமைத்தது மூலம் கடந்த காலம் முழுவதும் தொழிலாள வர்க்க இயக்கத்தை இவ்வாறாகவே தோல்வியுறச் செய்தனர். இங்கு ந.ச.ச. கட்சியின் குழப்பமான அரசியல் தொழிலாள வர்க்கத்தைப் பாரதூரமான முறையில் வழிதவறி அழைத்துச் சென்றுள்ளது, என்பது நன்கு தெளிவாகின்றது. மக்கள் கட்சி தொழிலாள வர்க்கத்தின் மிகப்பெரிய கட்சி எனக் கூறியவாறு அதனுடன் அமைக்கும் ஐக்கிய முன்னணி மூலம் புரட்சியை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அக்கால கட்டத்தில் ஜே.வி.பி. ஓர் பாசிஸ அரைப் பாசிஸ இயக்கம் என விளக்கம் கூறப்பட்டது. இன்று மக்கள் கட்சியை மறந்து விட்டு, ஜே.வி.பி. ரத்னாயாவின் நரோட்னிக் இயக்கத்திற்குச் சமமானது எனக் கூறியவாறு அவர்களோடு ஐக்கிய முன்னணியை அமைக்க முற்பட்டுள்ளனர். மேலோட்டமாகத் தகவல்களை சேகரித்து நடைமுறை அனுபவங்கள் மூலம் முடிவுகளுக்கு வருவது வெற்றி அளிக்க மாட்டாது என்பதனையே இது எடுத்துக் காட்டுகின்றது.

தனது உறுதிமொழிகளைப் பச்சை பச்சையாகவே மீறியதோடு, ஒடுக்கப்பட்ட மக்கள் வாழமுடியாத வகையில் சுமைகளைச் சுமத்தி, வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களை ஜனாதிபதி பிரேமதாச அரசாங்கம் ஏமாற்றியுள்ளது. இவ்வரசாங்கத்தை இராஜினாமாச் செய்ய நிர்ப்பந்திக்கும் மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்புவது இன்று மிக அத்தியாவசியமாகும். அதற்கான முதற்படியாக உழைக்கும் மக்களின் மாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கு வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் ஒத்துழைப்பையும் பெறுவது அத்தியாவசியமாகும். இது அமுலாக்கப் படாவிட்டால் வேறு வகையில் மீண்டும் சிங்கள இனவாதிகளின் தேவைகள் ஸ்ரீ.ல.சு.க.வூடாகத் தோன்றும். இடதுசாரிகளும் அதற்குக் கட்டுப்படும் ஒரு நிலைமை தோன்றுவதைத் தவிர்க்க முடியாது. முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதற்கு, பிரேமதாசாவுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதைத் தவிர ஸ்ரீ.ல.சு.க. வேறு ஒன்றையும் செய்ய மாட்டாது. ஆகவே, கீழ் மட்டத்திலிருந்து உருவாகும் அரசாங்க எதிர்ப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அவசியத்துடன் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் மேலோட்டமாக சமாதானம் நிலவினாலும் ஸ்ரீ.ல.சு.க. மேலும் நெருக்கடிகளை எதிர்நோக்கும். இன்றைய நெருக்கடிகளுக்குத் தீர்வாக மீண்டும் மக்கள் ஐக்கிய முன்னணிகளைக் கட்டியெழுப்பும் கருத்தை கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்துள்ளது. மக்கள் கட்சியின் நெருக்கடி உச்ச கட்டத்தை அடைந்துள்ளதோடு, வெகுவிரைவில் அது இரண்டாகப் பிளவுபடும் அறிகுறிகள் தோன்றியுள்ளன. ஸ்ரீ.ல.சு.க. கட்சிக்குச் சார்பாக ஒரு பிரிவினரும், இன்றைய ஆட்சிக்குச் சார்பாக ஒரு பிரிவினரும், தனிநபர் முரண்பாடுகளைக் கொண்ட ஒரு பிரிவினரும் இப்பிளவின் போது வெளித்தோன்றுவர்.

6....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசாங்கத்தின் அடக்குமுறை முன்னே குழப்பமான நிலையில் இருக்கும் வழிதவறப்பட்ட சிங்கள சிறுமுதலாளித்துவ இளைஞர்கள் சரியான வழியில் வழிநடத்தப்படுவதற்குப் பலம் வாய்ந்த அரசாங்க எதிர்ப்பு இயக்கத்தைத் தொழிலாள வர்க்கத் தலைமையில் கட்டியெழுப்ப வேண்டும். தனிநபர்களைப் படுகொலை செய்யும் மிலேச்சத்தனமான அரசியலையும் பயங்கரவாதத்தின் ஊடாக அரச அடக்குமுறைக்கு முகங்கொடுக்கும் வங்கரோத்து அரசியலையும் இத்தகைய தவறற்ற அரசியல் நடைமுறை மூலமே நெறிப்படுத்த முடியும்.

கிளர்ச்சியைப் பின்வாங்கச் செய்தமை பிரேமதாச பெற்ற பெரு வெற்றியாகும். இது தேசிய ரீதியில் மாத்திரமின்றி சர்வதேச ரீதியிலும் தனது அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்குக் காரணமாக அமைந்தது. எனவே, சிறுமுதலாளித்துவக் கிளர்ச்சியின் இறுதி விளைவு அரசு இயந்திரம் பலப்படுத்தப்பட்டமையும், எதிர்ப்புரட்சி தற்காலிகமாகப் பலம் பெற்றமையும் ஆகும். பொருளாதார ரீதியில் எத்தகைய நெருக்கடிகளை எதிர்நோக்கிய போதிலும் இறுதியில் சர்வதேச முதலாளித்துவ அமைப்புகள் முதலாளித்துவத்தின் பாதுகாப்பிற்கு முன்வரும் என்பதனை இலங்கையில் அனுபவவாயிலாகக் கண்டோம். ஆகவே, நெருக்கடியை எதிர்நோக்கும் முதலாளித்துவ அமைப்பைத் தகர்த்தெறிந்து சோசலிச சமூக அமைப்பைக் கட்டியெழுப்புவதற்கு சகல ஒடுக்கப்பட்ட மக்களையும் அணிதிரட்ட வேண்டும். இத்தகைய மார்க்கத்தைத் தவிர்ந்த வேறு வழிகள் மூலம் முதலாளித்துவ வர்க்கத்தைத் தோல்வியுறச் செய்ய முடியாது. தொழிலாள வர்க்கம் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த போதிலும் மாக்சிச நடைமுறையைப் புறக்கணிக்கும் அமைப்புகள் சரியான மார்க்கத்தில் செல்ல மாட்டா. ஆனால், தொழிலாள வர்க்கத்தின் சக்தி வரையறுக்கப்பட்ட முறையிலேனும் இந்த அமைப்புகளின் ஊடாகவே மையப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகக்குறைந்த சம்பளம் ரூபா 2500/- ரூபாவையும் 12 கோரிக்கைகளையும் முன்வைத்துக் கட்டியெழுப்பப்பட்ட ஒன்றிணைந்த தொழிற் சங்க அமைப்பு குறைந்தபட்ச கோரிக்கைகளையேனும் முன்வைத்துத் தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டுவதை நாம் ஊக்கப்படுத்த வேண்டும். இக் கோரிக்கைகளின் அடிப்படையில் வேலைத்தலங்களிலும், தொழிற்சாலைகளிலும், ஒன்றிணைந்த அமைப்புகளைக் கட்டியெழுப்பித் தொழிலாள வர்க்கத்தைப் பலப்படுத்த வேண்டியது முதல் முக்கிய நடவடிக்கையாகும். இவ்வாறாகவே, தேசிய மாநாட்டிற்கும் ஆர்ப்பாட்ட இயக்கத்திற்கும் செல்ல முடியும். தொழிலாள வர்க்கத்தைக் கீழ் மட்டங்களிலிருந்து ஐக்கியப்படுத்துவதற்குப் பங்காளர்களாகுமாறே அ.வி.சே.ச. தலைமையில் செயற்படும் உழைக்கும் மக்களின் ஒன்றிணைந்த இயக்கப் பிரிவினருக்கும் நாம் எடுத்துக்கூற வேண்டும். வடக்கு-கிழக்கில் செயற்படும் அரசியல் குழுக்களின் கீழ் வரையறுக்கப்பட்ட ரீதியிலேனும் கட்டியெழுப்பப்பட்டுள்ள

6....

www.tamilarangam.net



தமிழ்மொழியைப் பேசும் மக்களின் தொழிலாளர் அமைப்புக்களை இத் தொழிற் சங்கங்களின் ஒன்றிணைந்த இயக்கத்தில் சேர்த்துக்கொள்ள நாம் உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்; ஆர்ப்பாட்டம் செய்தல் வேண்டும், தோட்டப் பகுதிகளின் அமைப்புகளைப் பரவலாகச் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறாக, சம்பிரதாயத் தலைமை வர்க்கப் போராட்டப் பாதையிலிருந்து விலகும் அரசியலுக்கும், சிறு முதலாளித்துவத்தின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் எதிராகப் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் செயற்படுவது மாக்சிஸப் போராளிகளின் பொறுப்பாகும். இது பொறுமையுடன் செய்ய வேண்டிய போராட்டமாகும். பாரிய பல தோல்விகளின் பின்னர் துரித பலாபலன்களை எதிர்பார்க்க முடியாது. ஆனால், நிரந்தர வெற்றியின் மார்க்கம் இதுவேயாகும்.

அடுத்த வரவு செலவுத் திட்டம் மூலம் விலைவாசிகள் மேன்மேலும் உயர்த்தப்படும். மறுபுறம் தொழிலாள வர்க்கத்தின் செயற்பாட்டை நசுக்குவதற்கு அரச ஒடுக்குமுறை பயன்படுத்தப்படும். ஆனால் இதனை நீண்டகாலத்திற்குத் தொடர்ந்து அமுல்படுத்த முடியாது. வடக்கு கிழக்கு நெருக்கடி புதிய பாதையை எடுக்கும். இந்திய இராணுவம் வெளியேற ஆரம்பித்துள்ள போதிலும் அது பிரச்சினையின் முடிவு அல்ல. இராணுவ அடக்குமுறை மூலம் தென்னிலங்கை சிறுமுதலாளித்துவ கிளர்ச்சி நசுக்கப்பட்ட போதிலும், கிராமிய விவசாய சிறுமுதலாளித்துவ நெருக்கடிகளுக்குத் தீர்வு காணாதபடியால் பிரச்சினைகள் மேன்மேலும் அதிகரிக்கவே செய்யும். திடீரென மிகப்பெரிய செயற்பாட்டை எதிர்பார்க்க முடியாவிட்டாலும், தொழிலாள வர்க்கம் முதலாளித்துவத்தின் சவாலை ஏற்கத் தயாராகிவிடும். எனவே, மீண்டும் இனவாதம் தலைதூக்க இடமளிக்காமல் அரசாங்க எதிர்ப்பு செயற்பாட்டைத் தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழ் கட்டியெழுப்புவதே மாக்சிஸ்டுகளின் கடமையாகும். அரசாங்க எதிர்ப்பு மக்களையும், வடக்கு-கிழக்கு-தோட்டப் பகுதி தமிழ் மக்களையும் இத்தகைய ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் ஒரணித்திரட்டப் போராடுவது தொழிலாள வர்க்கத்தின் வெற்றிப் பாதையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்